# ஒரு mRNA-தடுப்பு மருந்துடன் கூடிய பூஸ்டர் தடுப்பூசி (பைசெர்/பயோன்ரெக், மொடேர்னா)

**mRNA-தடுப்பு மருந்துகள் கடுமையான கோவிட்-19 நோய்கள் ஏற்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுவதிலிருந்து நன்கு பாதுகாக்கின்றன. இருப்பினும், 65 வயதுக்கு மேற்பட்டவர்கலுக்கு, தடுப்பூசியின் இப் பாதுகாப்பு காலப்போக்கில் குறைந்து செல்லலாம் என்று காண்பிக்கின்றது. இந் நபர்களுக்கு, இறுதியாக தடுப்பூசி போடப்பட்டு 4 மாதங்களிலிருந்து பூஸ்டர் தடுப்பூசியை நாம் சிபார்சு செய்கிறோம். இதுவரை தடுப்பூசிப் பாதுகாப்பு, 65 வயதுக்குட்பட்ட நபர்களுக்கு கடுமையான நோய்களுக்கு மற்றும் புதிய வைரஸ் மாதிரிகளுக்கும் பாதுகாப்பளிக்கும் என்பது இன்னும் தெளிவாக்கப்படவில்லை. இருப்பினும், இலேசாக நோய் ஏற்படுவதாற்கு எதிரான பாதுகாப்பு மற்றும் வைரஸ் பரவுவதற்கு எதிரான பாதுகாப்பு, காலப்போக்கில் எல்லா நபர்களிடத்திலும் குறைவடைகிறது. இது மாதிரிகளைப் பொறுத்து விரைவாகவோ அல்லது மெதுவாகவோ நடைபெறுகின்றது. எனவே, 16 முதல் 64 வயதுக்கிடையிலுள்ள அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசியை நாம் சிபார்சு செய்கிறோம்.**

## பூஸ்டர் தடுப்பூசி ஒன்று எதற்காக?

பூஸ்டர் தடுப்பூசி மூலம், நோயெதிர்ப்பு கட்டமைப்பு நோய்க்கிருமியை நினைவூட்டுகிறது. தடுப்பூசி மூலமான உயர்வான பாதுகாப்பு மீள்கட்டமைக்கப் படுவதுடன் நீள்ப்பிக்கப்படுகிறது.

## பூஸ்டர் தடுப்பூசி யாருக்கு சிபார்சு செய்யப்படுகின்றது?

கடுமையான கோவிட்-19 நோய் ஏற்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்கு பூஸ்டர் தடுப்பூசி 65 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் சிபார்சு செய்யப்படுகிறது. விசேடமாக இது கீழே உள்ளவர்களுக்கு சிபார்சு செய்யப்படுகிறது:

- 75 வயதுக்கு மேற்பட்டவர்கள்;
- 65 வயதுக்கு மேற்பட்ட நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்கள் கடுமையான கோவிட்- 19-நோய்வாய்ப்படுவதற்கு அதி உச்ச ஆபத்தில்[1] உள்ளலவர்கள்;
- வயோதிபர் இல்லங்கள், பராமரிப்பு இல்லங்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையங்களில் வசிக்கும் முதியோர் மற்றும் பராமரிப்பாளர்கள்.

பூஸ்டர் தடுப்பூசியானது தொற்றுக்கள் மற்றும் இலேசான நோய்கள் தவிரவும் அவற்றினால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு எதிரான பாதுகாப்பை அதிகரிக்க உதவுவதுடன் (உதாரணம். கோவிட்-19 இன் நீண்ட கால பின்விளைவுகள், வேலைக்கு செல்லாதிருத்தல்) வைரஸ் பரவுதலை தற்காலிகமாக குறைக்கவும் பங்களிப்பை நல்குகின்றது. எனவே பூஸ்டர் தடுப்பூசி 16 தொடக்கம் - 64 வயது வரை உள்ள அனைவருக்கும் சிபார்சு செய்யப்படுகிறது. விசேடமாக:

- 65 வயதுக்குட்பட்ட நாள்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்ட விசேட அபாயத்திலுள்ள நபர்கள் கடுமையான கோவிட்- 19-நோய்வாய்ப்படுவதற்கு அதி உச்ச ஆபத்தில்[1] உள்ள நபர்கள் [1].
- வயோதிபர் இல்லங்கள், பராமரிப்பு இல்லங்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு நிலையங்களில் வசிக்கும் 65 வயதுக்குட்பட்ட நபர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள்.
- நோயாளர்களுடன் நேரடித் தொடர்பிலுள்ள சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் விசேட ஆபத்தில் உள்ளவர்களைப் பராமரிக்கும் பணியாளர்கள்.

கர்ப்பம் தரித்திருக்கும் காலப்பகுதியின் 2வது மூன்றில் இரண்டு காலப் பகுதியிலிருந்து கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கும் பூஸ்டர் தடுப்பூசி சிபார்சு செய்யப்படுகின்றது.

## பூஸ்டர் தடுப்பூசி எப்போது மேற்கொள்ளப்பட வேண்டும்?

ஒரு mRNA- தடுப்பூசி மூலம் முழுமையான அடிப்படை நோய்த்தடுப்பு ஏற்பட்ட பின்பு 4 மாதங்களுக்குப் பின் பூஸ்டர் தடுப்பூசி போட சிபார்சு செய்யப்படுகிறது. முழுமையானதொரு அடிப்படை நோய்த்தடுப்பு கீழ்வரும் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றது:

- ஒரு mRNA-தடுப்பு மருந்தினுடைய தடுப்பூசியின் இரண்டு டோஸ்களுக்குப் பின்னர்; அல்லது

[1] அட்டவணை *2இ* பக்.*11* இல் mRNA -தடுப்பூசிக்கான சிபார்சு*: அதிக ஆபத்தில் உள்ள நாள்பட்ட நோய்கள் உள்ளவர்களுக்கான நோய் வரைவிலக்கணம்.*

இவ்வாறு எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்

- கொரோனா வைரஸால் உறுதிப்படுத்தப்பட்ட தொற்றின் பின்னர் + ஒரு mRNA தடுப்பு மருந்தின் தடுப்பூசி டோஸுக்குப் பிறகு குறைந்தது 4 வார கால இடைவெளியில் (வரிசைக் கிராமத்தில் தங்கி இல்லாமல்)

ஒரு mRNA- தடுப்பூசி மூலம் முழுமையான அடிப்படை நோய்த்தடுப்பு ஏற்பட்ட பின்னர், கொரோனா வைரஸினால் தொற்று உறுதி செய்யப்படாதிருப்பின், கீழ்வருவன செல்லுபடியாகும்:

- முழுமையான அடிப்படை நோய்த்தடுப்பு ஏற்பட்ட பின் 4 மாதங்களுக்குள் தொற்று ஏற்பட்டால், இத் தொற்று ஏற்பட்டு 4 மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசி சிபார்சு செய்யப்படுகின்றது.
- முழுமையான அடிப்படை நோய்த்தடுப்பு ஏற்பட்ட பின் 4 மாதங்களுக்கு மேலாக தொற்று ஏற்பட்டால், மேலதிக தடுப்பூசி எதுவும் அவசியமற்றது.

**எவ்வாறான தடுப்பூசி மருந்து மற்றும் எந்த அளவுடன் (டோசிஸ்) பூஸ்டர் தடுப்பூசி போடப்படுகிறது?**
கொள்கையளவில், அடிப்படை நோய்த்தடுப்பு போலவே பூஸ்டர் தடுப்பூசிக்கும் முடியுமானவரை அதே தடுப்பூசி மருந்து பயன்படுத்தப்பட வேண்டும். இது கிடைக்காத பட்சத்தில், மற்ற mRNA-தடுப்பூசியையும் பயன்படுத்திக் கொள்ள முடியும். அடிப்படை நோய்த்தடுப்புக்கு வெவ்வேறு mRNA-தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டிருப்பின், இவ் இரண்டு தடுப்பூசிகளில் ஒன்றைக் கொண்டு பூஸ்டர் தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியும். அடிப்படை நோய்த்தடுப்பு போன்றே 30 வயதுக்குட்பட்ட நபர்களுக்கு பைசர் /பயோன்ரெக் பூஸ்டர் தடுப்பு மருந்துக்கு முன்னுரிமை வழங்குமாறு சிபார்சு செய்யப்படுகின்றது.

பைசர் /பயோன்ரெக் தடுப்பு மருந்துக்கு பூஸ்டர் தடுப்பு மருந்தாக அடிப்படை நோய்த்தடுப்பு போன்றே அதே அளவான டோசிஸ் போடப்படுகின்றது. மோடேர்னா தடுப்பூசி மருந்தின் பூஸ்டர் தடுப்பூசிக்கு அரைவாசி டோஸிஸ் கொடுக்கப்படுகிறது.

**நான் எங்கு தடுப்பூசி போடலாம்?**
தடுப்பூசி போடுவதற்கு மாநிலங்களே பொறுப்பாகும். நீங்கள் எங்கு பதிவு செய்வது மற்றும் எங்கு தடுப்பூசி போடலாம் என்பதை இணையதளத்தில் அல்லது உங்கள் மாநிலத்தின் இன்போலைன் *(www.foph-coronavirus.ch/cantons)* இல் அறிந்து கொள்ளுங்கள். அல்லது உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் கேளுங்கள்

**அடிப்படை நோய்த்தடுப்பு போலவே பூஸ்டர் தடுப்பூசிக்கும் மீதமுள்ள தகவல்கள் ஒரே மாதிரியானவை என்பதுடன் «*mRNA- தடுப்பு மருந்துடன் கூடிய கோவிட்-19 தடுப்பூசி பற்றிய பொதுவான தகவல்கள்*» என்ற துண்டுப்பிரசுரத்தில் இவற்றை வாசித்தறிந்து கொள்ள முடியும்.**